Kerosene

* 642 *Q.*—Sri A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have investigated the reported occurrence of kerosene in the Coromandal coast; and

(*b*) whether any investigations have been undertaken by the Government on the occurrence of kerosene in Mayuram while digging a bore well?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) The possibilities of occurrence of oil in these areas are under examination by the Geological Survey of India.

(*b*) No information is available on the occurrence of kerosene in Mayuram, Tanjore district. However, the occurrence of natural gas in certain villages in Sirkali taluk, Tanjore district, has been reported and Government have sanctioned a scheme for the collection of the natural gas and for examining the possibilities of putting them to various industrial uses. Preliminary work relating to this has been taken up.

Sri A. VEDARATHNAM : இந்த ஆராய்ச்சியை இந்திய சர்க்கார் செய்வதாக மந்திரியவர்கள் குறிப்பிட்டார்கள். நம்முடைய இராஜ்யத்தில் பூகர்ப்ப ஆராய்ச்சி ஸ்தாபனங்கள் உண்டா? அதிகாரிகள் இருக்கிறார்களா? இல்லையானால், எங்கெல்லாம் நிலக்கரி கிடைக்கிறதோ, அங்கே கெரோஸின், பெட்ரோல் கிடைக்கிறது என்பதால், அந்தப் பகுதிகளை ஆராய முன்வருவார்களா?

The Hon. Sri R. VENKATARAMAN : இந்த ஸர்வே மத்திய சர்க்காரால் நடத்தப்படுகிறது. கனிப் பொருள்களை ஆராய்ச்சி செய்ய நம் இராஜ்யத்திலும் தனியாக ஆராய்ச்சி நிலயமும், ஏற்படுத்தி இருக்கிறோம். இந்த ஸர்வே மத்திய சர்க்கார் செய்வதற்குக் காரணம், அவர்களுக்குத்தான் ஸர்வே செய்யக்கூடிய எல்லா விதமான பெஸிலிட்டிஸ்களும் இருக்கின்றன.

Sri N. R. THIAGARAJAN : இராமநாதபுரம், சாத்தூர் வைப்பாரு பாலம் கட்டும்போது, அஸ்திவாரத்தில் எண்ணை கிடைப்பதாகச் சொல்லப் பட்டது. எண்ணை கிடைக்கிறதா? ஆராய்ச்சி நடந்ததா?

The Hon. Sri R. VENKATARAMAN : I would very much like to strike oil but it seems to me very difficult.

Sri A. A. RASHEED : What are the places in our State where oil is found?

The Hon. Sri R. VENKATARAMAN : Oil is not found in any place in our State. But certain experts who visited this country said there were possibilities of oil being found on the coastal belt from West Bengal down to Cape Comorin. They also said that aero-magnetic survey may be conducted in this area and the possibility is of finding oil under the sea and not very much on the surface.

Sri C. MUTHIAH PILLAI : ஒரு பம்பாய் நிபுணர் சீர்காழி தாலுக்காவில் ஆராய்ச்சி செய்வது பிரயோசனமானது என்று சொன்னார்கள். அதற்கு அரசாங்கம் கொடுத்திருக்கும் ரூ. 8,500 காணாது

8th April 1958]

என்றும் சொன்னார்கள். ஆறு மாத காலம் ஆயிற்று. இன்னும் ஆராய்ச்சி எடுத்துக்கொள்ளவில்லை. அதை ஏற்படுத்த முடியுமா? அதற்குள்ள சூழ் நிலையை ஏற்படுத்தி, பொருள்கள் கிடைத்தால், தொழிற்சாலை ஏற்படக்கூடிய நிலையை ஏற்படுத்துமா என்று திட்டவட்டமாக அரசாங்கம் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்கார் ஒதுக்கியிருக்கும் பணம் போதாது என்பதை அங்கத்தினர் அவர்களிடம் சொன்னதை என்னிடத்தில் சொல்லியிருந்தால் முயற்சி செய்யலாம். ஆராய்ச்சி நடந்து கொண்டு இருக்கிறது. அதன் பலனாக, அங்கே கிடைக்கும் 'காஸ்', வாயு, இன்டஸ்டிரியல் யூஸ், தொழிற்சாலை உபயோகத்திற்கு பயன்படுமானால் சர்க்கார் எல்லா முயற்சிகளும் செய்யும்.

SRI S. NAGARAJA MONIGAR : கனம் பொருந்திய சர்தார் வேதரத்தினம் அவர்களுக்கு கூட மத்திய சர்க்கார் பேரில் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறதா என்று கேட்கிறேன்.

MR. SPEAKER : I rule the question out of order.

Petroleum

* 643 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether experts have made any investigation of the occurrence of petroleum in this State; and

(*b*) the details about the steps proposed to be taken by the Central and State Governments in the matter?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The Geological Survey of India are conducting survey of the oil possibilities in this State as part of their programme of oil survey in India. This Government have asked for a high priority for investigation in this State.

SRI K. VINAYAKAM : தேர்தல் காலத்திலே, இங்கே இருக்கிற ஒரு எதிர் கட்சிக்காரர்கள் காவேரித் தண்ணீர்ல் எண்ணெய் இருக்கிறது, எங்களை அனுப்பினால் துருவி ஆராய்ந்து எண்ணெய் தருவோம் என்றார்களே, அதை ஆராய்ந்து பார்த்தார்களா ? காவேரித் தண்ணீரில எண்ணெய் இருக்கிறது என்ற முடிவுக்கு வந்தார்களா ?

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

SRI P. G. MANICKAM : பெட்ரோல் ஊற்றுகள் ஆங்காங்கே அகப்படலாம் என்ற யோசனையை நிபுணர்கள் தெரிவித்தார்களே, அதைப்பற்றி மத்திய சர்க்காருக்கு, நம் சர்க்கார் என்ன யோசனை தெரிவித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த எண்ணெய் வங்காளத்திலிருந்து, கன்யாகுமரி வரை இருக்கும் பிரதேசங்களில் அகப்படலாம் என்ற யோசனை சொல்லப்படுகிறது. புதிதாக ஸர்வே நடத்த வேண்டும் என்று சொல்லப்படுகிறது.